**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No.55 of 2022**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 23.07.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | எம்.செல்வம் | Father Name | : | முனிசாமி |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | calling | : | |
| Religion | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சி – பிரிவில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . 2021ம் வருடம் நான் பர்கூர் வட்டம் , ஒரப்பம் வருவாய் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். என்னுடன் கிராம உதவியாளராக முருகன் என்பவர் பணிபுரிந்து வந்தார் . கடந்த 27.10.2021 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் என்னுடன் உதவியாளர் முருகன் என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒரப்பம் மதுபான கடை அருகே ஆறுமுகம் என்பவர் கிணற்றில் ஒருவர் இறந்துகிடந்த பிரேதத்தை பர்கூர் தீயணைப்பு துறையினர் எடுத்து வைத்திருப்பதாக தகவல் சொன்னார்.

நான் உடனே புறப்பட்டு 8.30 மணியளவில் சம்பவம் நடந்த இடம் அருகே சென்று பார்த்தேன் . அங்கே என் உதவியாளர் முருகன் பர்கூர் தீயணைப்பு துறையினர் மற்றும் ஆட்கள் கூட்டமாக இருந்தனர். பர்கூர் தீயணைப்பு துறையினர் பிரேதத்தை கிணற்று அருகே வைத்திருந்தனர்.பிரேதத்தில் காயம் ஏற்பட்டிருந்தது . கிணற்றின் உரிமையாளர் திரு.ஆறுமுகம் என்பவரை விசாரித்ததில் 27.10.2021 மாலை 5.00 மணியளவில் தனது கிணற்றிற்கு அருகே உள்ள கொட்டாயில் 4 நபர்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததாக கூறினார்.

நான் அவர்களை விசாரிக்கையில் சென்றுவிடுவதாக கூறினார்கள் . நான் என் தோட்ட வேலை பார்க்க சென்று விட்டேன் . சிறிது நேரம் கழித்து மாலை 5.30 மணியளவில் கிணற்றில் டமார் என்று சத்தம் கேட்டது . ஒரு நபர் மதுபான கடை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருந்தார் . 2 நபர்கள் கிணற்றின் கிழக்கு புறம் வரப்பின்மீதுவேகமாக சென்றுக்கொண்டிருந்தார்கள். நான் கிணற்றிற்கு அருகில் சென்று பார்த்தேன். கிணற்றில் யாரோ விழுந்துகிடந்ததாக தெரிந்தது. நான் சத்தம் போடுகையில் ஆட்கள் வந்தார்கள்.

பர்கூர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்து அவர்கள் வந்து இரவு 8.00 மணியளவில் பிரேதத்தை கிணற்றிலிருந்து எடுத்ததாக ஆறுமுகம் கூறினார் . நான் பிரேதத்தை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் . பின்பு இறப்பின் சந்தேகம் இருப்பதால் கந்திகுப்பம் காவல் நிலையத்தில ஆஜராகி இரவு 11.00 மணியளவில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் . அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். பின்பு விசாரிக்கையில் சின்னஒரப்பம் கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் கிணற்றிற்கு அருகே திலிப்குமார் உட்பட 4 நபர்கள் மது அருந்தவேண்டி வந்ததாகவும் அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு ரசீத் என்பவரை திலீப்குமார் தள்ளியதில் அவர் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டதாக தெரியவந்தது.

பர்கூர் காவல் ஆய்வாளர் 28.10.2021 அன்று விசாரணைக்காக வேண்டி நான் மற்றும் எனது உதவியாளரை சம்பவ இட கிணற்றின் அருகே இருக்குமாறு கேட்டுக்கொண்டதன்அடிப்படையில் நானும் என்னுடைய கிராம உதவியாளரும் 28.10.2021 அன்று காலை 6.30 மணியளவில் சம்பவ கிணற்று அருகே இருந்தோம் . பர்கூர் காவல் ஆய்வாளர் காலை 6.45 மணியளவில் சம்பவ கிணறு அருகே வந்து பார்வையிட்டார் . காலை 7.15 மணிக்கு சம்பவ கிணறு மற்றும் சுற்றியுள்ள பகுதியை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் . அந்த பார்வை மகஜரில் நானும் என் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம்.

பார்வை மகஜரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் . அந்த ப ார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆகும். காலை 7.45 மணியளவில் சுமார் 360 மிலி அளவுள்ள இரண்டு கண்ணாடி பாட்டில்களில் 350 மிலி அளவில் கிணற்று தண்ணீர் சீல் செய்து பார்வை மகஜர் தயார் செய்தார் . தற்போது காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகும். அந்த 350 மிலி கொண்ட தண்ணீர் கொண்ட சீல் செய்யப்பட்ட ஒன்று மட்டும் சா.பொ.1 ஆகும். பின்பு பர்கூர் காவல் ஆய்வாளருடன் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

பின்பு அன்று 1.00 மணியளவில் கிருஷ்ணகிரி காட்டிநாயன்ப்பள்ளி, சுண்ணம்பட்டி, ஒரப்பம் பகுதிகளில் எதிரியை கண்காணித்துக்கொண்டு செல்லும்போது செட்டிப்பள்ளி கூட்ரோடில் விநாயகா பேக்கரி அருகில் பின்பு பெயர் விலாசம் கேட்டு தெரிந்த திலீப்குமார் என்பவரை காவல் ஆய்வாளர் அவர் பார்டியுடன் பிடித்து விசாரித்ததில் 27.10.2021 அன்று தனக்கும் , ரசீத் என்பவருக்கும் சின்ன ஒரப்பம் ஆறுமுகம் கிணறு அருகே தகராறு ஏற்பட்டதில் நான் தள்ளியதில் அவர் கீழே விழுந்து இறந்துவிட்டார் என்பதை ஒப்புக்கொண்டார் . அவரை பாகூர் காவல் ஆய்வாளர் 3.00 மணியளவில் கைது செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அதில் நானும் என் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம்.

எதிரி கொடுதத ஒப்புதல் வாக்குமூலதில் முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 2 வது சாட்சி கையொப்பம் கிராம உதவியாளருடையது. அந்த கையொப்பம் மட்டும் அ .த.சா.ஆ.4 ஆகும். இது சம்மந்தமாக பர்கூர் காவல் ஆய்வாளார் விசாரித்தார். தற்போது ஆஜரிலிருக்கும் எதிரிதான் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர் ஆவார்.

**குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு சம்பவ இடத்தில் இருந்த 4 நபர்கள் பெயர் விலாசம் பின்னிட்டு தெரிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. புகார் கொடுப்பதற்கு முன்பாகவே அந்த விவரம் தெரியும்.

புகாரில் அந்த கிணற்றிற்கு அருகே இருந்த 4 நபர்களின் பெயர்களை நான் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். மேற்படி கிணறு ஆறுமுகத்திற்கு சொந்தமானது என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் ஆவணம் ஏதும் பார்க்கவில்லை.

ஏற்கனவே ஆறுமுகம் எங்கள் அலுவலகத்திற்கு வந்துள்ளார் . அதனால் அந்த கிணறு ஆறுமுகத்துடையது என்று தெரியும். புகாரை நான் காவல் நிலையத்திற்கு முன்பு வைத்து எழுதினேன் . நான் கையெழுத்து போடட பார்வை மகஜரில் சர்வே எண் .294/4 பி யாருக்கு சொந்தமானது என்று எழுதியுள்ளார் சொன்னால் ஆறுமுகத்திற்கு சொந்தமானது என்று எழுதியுள்ளார்கள். அந்த கிணற்றிற்கான விவசாய சர்வீஸ் எண் எதுவும் எனக்கு தெரியாது. அந்த சர்வீஸ் கனெக்சன் பற்றி பார்வை மகஜரில் எழுதப்பட்டதா என்ற விவரம் எனக்கு ஞபாகமில்லை.

பார்வை மகஜரில உள்ள விவரங்கள் எனக்கும் தெரியாது என்றும் வெறும் கையெழுத்து மட்டும்தான் போட்டுள்ளேன் என்று சொன்னால் அது தவறு. புகாரை நான் போலிசார் சொல்லசொல்ல எழுதியுள்ளேன் என்றும் , சொந்தமாக நான் எழுதவில்லை எனறு சொன்னால் அது தவறு. எதிரியை கைது செய்த இடத்திலே போலிசார் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் . எதிரி கைது செய்த இடத்தில் பொதுமக்கள் நடமாட்டம் இருந்தது என்று சொன்னால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் தயாரித்தபிறகு நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்று சொன்னால் அது தவறு போயிருந்தேன்.

எதிரியை நான் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும் அவர் என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஒன்று என்று சொன்னால் அது தவறு. 28.10.2021 அன்று காலையில் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் அந்த பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டு அதே காவல் நிலையத்தில வைத்து கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் அது தவறு. நான் சம்பவம் குறித்து

போய் விசாரித்தபோது சம்பவத்தை நேரில் பார்த்தாக என்னிடம் யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அவ்வாறு ஊர்மக்களை விசாரிக்கும்போதுஅந்த கிணற்றிற்கு அருகே மதுபான கடை உள்ளதால் மதுபான கடைக்கு வரும் நபர்கள் கிணற்றிற்கு அருகே வந்து மது அருந்தி பேசிக்கொண்டிருப்பார்கள் என்ற விவரம் தெரியவந்தது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு குறித்து நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றும் , போலிசார் சொல்லிக்கொடுத்து அதற்கேற்றார்போல் முதல்வசிாரணை சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் அது தவறு . எதிரி முதல் முறையாக தற்போதுதான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றும் ஏற்கனவே பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு அவரை 28.10.2021 அன்று பார்த்துள்ளேன்.

V DAMODARAN

Additional District Judge

Digitally signed by V DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No.55 of 2022**

Prosecution witness LW3 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 23.07.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஸ்ரீபிரதீஷ் | Father Name | : | மோகன்குமார் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | calling | : | |
| Religion | : | | Age | : | |

**Accused present.**

<u>முதல் விசாரணை:</u>

நான் பர்கூர் வட்டம் , மிட்டப்பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன் . நான் தற்போது பெங்களுரில் தனியார் கம்பெனியில் பயிற்சி எடுத்து வருகிறேன். 2021ம் வருடம் நான் பி .எஸ்.வி பொறியியல் கல்லூரியில் கம்ப்யூட்டர் சைன்ஸ் படித்து வந்தேன் . கடந்த 27.10.2021 அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு நான் பி .எஸ்.வி கல்லூரியில் உள்ள மைதானத்தில் கிரிக்கெட் ஆடிவிட்டு விளையாடிவிட்டு ஹாஸ்டல் உள்ள ரோடிற்கு வந்தேன். அந்த சமயத்தில் மனோகரன் தண்ணீ அடிக்க போகலாமா என்று கூப்பிட்டார். அப்போது திலீப்குமார் இருந்தார் . அவர்கள் எடுத்து வந்தது திலீப்குமார் பைக் ஆகும்.

வண்டியை நான் ஓட்ட திலிப்குமாரும் மனோகரனும் பின்னால் உட்கார்ந்துக்கொண்டார்கள். பி.எஸ்.வி காலேஜ் மெயின்ரோடு போகும்போது ரசீத் இருந்தார் . அவரும் உடன் வருகிறேன் என்றார் . எப்போது எல்லாமம் நான் பிரியாக இருக்கிறேனோ அப்போதெல்லாமம் நான் கூப்பிடும்போது போவேன் . நான் ,ரசீத், திலிப்குமார், மனோகரன் ஆகிய நான்கு பேரும் ஒரே வண்டியில் சின்ன ஒரப்பம் ஒயின்சாப்பிற்கு போனோம். டிரிங்ஸ் வாங்கினோம் . அந்த இடத்தில் கிணறு பக்கத்தில் ஒரு ஷெட் இருந்தது. அங்கு உட்கார்ந்து தண்ணி அடித்தோம்.

அங்கு 2 கல் போட்டு வைத்திருந்தார்கள் . இடது பக்கத்தில் நானும் மனோகரனும் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தோம் . வலது புறத்தில் திலிப்குமாரும் , ரசீத்-ம் உட்கார்ந்து பேசிக்கொண்டருந்தார்கள் . அப்போது திலிப்குமார் எப்போதும் நானே டிரிங்ஸ் வாங்கிதருகிறேன் என்று ரசீதை பார்த்து கேட்டார். நீயும் வாங்கித்தா என்று திலிப்குமார் ரசீதைபார்த்து கேட்டார். ரசீது திலிப் -ஐ பார்த்து தேவடியா மகனே, கண்டர ஒலி மகனே என்று திட்டினார். நாளைக்கு வாங்கித்தருகிறேன் என்று ரசீத் , திலிப்-டம் சொன்னார். அவர்களுக்குள் சண்டை ஆகிவிட்டது . இரண்டுபேரும் அடித்துக்கொண்டே கிணற்றுஅருகே போய்விட்டார்கள்.

நானும் , மனோகரனும் அங்கு போகாதீர்கள் கிணறு இருக்கிறது என்று சொன்னோம் அதன் பிறகு திலிப்குமார் ரசீத் -ஐ கிணற்றிற்குள்ளே தள்ளிவிட்டார். அந்த கிணறு சதுரமாகஇருக்கும் . அந்த சதுரமான கிணற்றில் உள்ளே நடப்பதற்கு ஷெட் மாதிரி ஒரு அமைப்பு இருக்கிறது . தள்ளிவிட்டவுடன் ரசீத் - அந்த ஷெட் மேல் விழுந்து தண்ணீரில் விழுந்துவிட்டார். தண்ணீ அடிக்கும்போது அந்த நிலத்தின் உரிமையாளர்ஆறுமுகம் என்பவர் வந்தார் . இங்கே எல்லாம் உட்காரதிங்க போங்க என்று சொன்னார். நாங்கள் 10 நிமிடத்தில் போய்விடுகிறோம் என்று சொன்னோம்.

தள்ளிவிட்ட பிறகு திலிப்குமார் ஒயின்சாப் வழியாக போய்விட்டார் . எனக்கும் மனோகரனுக்கும் பயமாக இருந்தது. அதனால் ரெகுலராக போகும் வழியில்லாமல் வேறு வழியாக ரோடிற்க போய்விட்டு வீட்டிற்கு போய்விட்டோம். காலை நானும் , மனோகரனும் ரோடிற்கு வந்தோம் . அப்போது போலிசார் என் அண்ணனுக்கு போன் செய்தார்கள் என்அண்ணன் எனக்கு போன் செய்தார் . போலிசார் அதன்பிறகு எங்கிருக்கிறாய் என்று கேட்டார்கள் நான் ரோட்டில் இருக்கிறேன் என்று சொன்னேன். சிவகாமி கல்லூரிஅருகே போலிசார் வரச்சொன்னார்கள் . போலிசார் நடந்த விவரம் தெரியுமா என்று கேட்டார்கள் நாங்கள் உடனிருந்தோம் என்று சொன்னோம்.

கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் . அங்கு ஒரு பாடியை பார்க்க சொன்னார்கள் . அந்த பாடிக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. அந்த பாடி ரசீத் பாடி ஆகும் . என்ன நடந்தது என்று போலிசார் மறுபடியும் விசாரித்தார்கள். அவர்களிடம் நடந்ததை சொன்னேன். அதன்பிறகு ஒரு மாதம் கழித்து என்னை இதே நீதிமன்ற வளகாத்தில் உள் ளநீதிமன்றத்தில் போலிசார் ஆஜர் செய்தார்கள் . அப்போது அந்த நீதிமன்றத்தில் இப்போது சொன்ன விவரத்தை சொன்னேன். அதை கேமரா வைத்தும் பதிவு செய்துக்கொண்டார்கள்.

நான் சொன்ன வாக்குமூலத்தை பதிவு செய்து என்னிடத்தில் கையெழுத்து வாங்கினார்கள் . தற்போது காண்பிக்கப்படும் 164 கு.வி.மு.ச வாக்குமூலத்தில்லுள்ள கையெழுத்து என்னுடையதுதான் . அந்த 164 கு.வி.மு.ச வாக்குமூலம் அ.த.சா.ஆ.5 ஆகும். ஆஜரிலிருக்கும் எதிரி திலிப்குமார்தான் இறந்துபோன ரசீத்-ஐ கிணற்றில் தள்ளிய நபர் ஆவார். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி அந்த கிணற்றிற்கு அருகே உள்ள ஷெட்டிற்கு முதன்முதலாக அன்றைய தினம்தான் போனோம் அதற்கு முன்பு போனதில்லை. அந்த கிணறு ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்டது எவ்வாறு தெரிந்துக்கொண்டேன் என்று சொன்னால் அவருக்கு பாத்தியம் என்பது முன்பாகவே தெரியும். அந்த ஒயின்சாப்பிற்கு நாங்கள் ரெகுலராக போவோம். அந்த கிணற்றிற்கு முதன்முதலாக போனோம். என் அண்ணன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார். சம்பவம் நடந்த அன்றைய தினம் என் அண்ணனுக்கு போன் செய்து பேசினேனா என்றால் அவ்வாறு எதுவும் பேசவில்லை.

என்னுடைய பிறந்த தேதி 25.12.2000 ஆகும். எத்தனை நாட்களாக நாங்கள் 4 பேரும் நண்பர்களாக உள்ளோம் என்று சொன்னால் நண்பர்களாக

இல்லை ஆனால் 3 பேரை தெரியும். அந்த மற்ற 3 பேரும் எங்கள் ஊரை சார்ந்தவர்கள் அதனால் தெரியும் . திலிப்குமாருக்கும், ரசீத்-க்கும் இந்த சம்பவத்திற்கு முன்பாக எந்தவித முன்விரோதம் இல்லை என்று சொன்னால் சரிதான் . திலிப்குமாருக்கும் எனக்கும் 3 வருடங்களாக பழக்கம். நான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சுமார் 10 அடி தள்ளி ரசீத் உட்கார்ந்து குடித்துக்கொண்டிருந்தார். திலிப்குமாருக்கும் ரசீத்-ற்கும் என் ன பிரச்சனை ஏற்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள் டெய்லி நானே வாங்கி தருகிறேன் என்று திலிப் சொன்னார்.

திலிப்குமார் மது வாங்கி நான் இதுவரை குடித்தது கிடையாதா என்று சொன்னால் அவர் வாங்கிகொடுத்து நான் குடித்திருக்கிறேன் . நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்ககசொல்லி யார் சொன்னார்கள் என்றால் என் அண்ணன் சொன்னா . போலிசார் ஒரு லட்டர் கொடுத்திருப்பதாகவும் அதனால் வாக்குமூலம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். போலிசார் என்ன வாக்குமூலம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்களா என்று சொன்னால் நடந்ததை சொல்லுமாறு சொன்னார்கள்.

சம்பவத்திற்கும் எதிரிக்கும் தொடர்பு கிடையாத என்றும், 4 பேருக்குள் ஏற்பட்ட பிரச்சனையில் ரசீத் - தவறி கிணற்றிற்குள் விழுந்துவிட்டார் என்றும், நானும் மனோகரனும் ஊரில் செல்வாக்காக உள்ளதை பயன்படுத்தி வழக்கிற்கு தொடர்பில்லாத எதிரி மீது தொடர்புபடுத்தி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு . நான் கிணற்றில் குதித்து ரசீத்-ஐ காப்பாற்ற முயற்சி செய்தேனா என்றால் நான் கிணற்றில் உள்ள படிக்கட்டில் குதித்து பார்த்தேன் ஒன்றும் தெரியவில்லை . அதனால் மேலே வந்துவிட்டேன். என்னைபோல் திலிப்பும் மனோகரனும் ரசீத் -ஐ காப்பாற்ற முயற்சி செய்தார்களா என்றால் அவர்கள் எதுவும் முயற்சி செய்யவில்லை.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு அதாவது கிணற்றிற்கு அருகே நான் அங்கே போகவில்லை என்று சொன்னால் அது தவறு . தற்போது போலிசார் சொல்லிக்கொடுத்து நீதிமன்றத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

V DAMODARAN

Additional District Judge

Digitally signed by V DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No.55 of 2022**

Prosecution witness LW4 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 23.07.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆறுமுகம் | Father Name | : | சின்னவேடி |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | calling | : | |
| Religion | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் சின்னஓரப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன் . நான் விவசாய வேலை செய்கிறேன். எனக்கு சொந்தமாக நிலம் எங்கள் மதுபான கடை அருகில் இருக்கிறது . அந்த நிலத்தில் ஒரு கிணறு இருக்கறிது . கிணற்றிற்கும் ஒயின்சாப்பிற்கும் சுமார் 300 அடி தொலைவு இருக்கும் . 27.10.2021 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் எங்கள் நிலத்தின் மாட்டுகொட்டாய் அருகே உள்ள கிணற்றிற்கு அருகே மதுஅருந்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பெயர் மனோ, பிரதீப் மற்றும் ஆஜர் எதிரி, ஸ்ரீ ஆகியோர் இருந்தார்கள். இதற்கு முன்பு சாட்சி சொன்ன அந்த நபரும் அங்கே இருந்தார்.

ரசீத்–ம் அந்த கூட்டத்தில் உட்கார்ந்துக்கொண்டிருந்தார் . 4 பேரும் டிரிங்ஸ் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். வீட்டிற்கு போங்கள் என்று நான் அவர்களிடம் சொன்னேன் . 5 நிமிடத்தில் போய்விடுகிறேன் என்று சொன்னார்கள். அதன்பிறகு நான் விவசாய வேலை செய்துவிட்டு நிலத்துப்பக்கம் போய்விட்டோம் . ஒரு 15 நிமிடம் கழித்து கிணற்று பக்கமிருந்து டமார் என்று சத்தம் கேட்டது . எனக்கு முன்பாக 2 நபர்கள் ஓடிவந்தார்கள். ஓடிவந்தவர்கள் மனோ மற்றும் இப்போது எனக்கு முன்பு சாட்சி சொன்ன நபர்.

இன்னொரு நபர் ஒயின்சாப் பக்கமாக ஓடிக்கொண்டிருந்தார் . நான் கிணற்றை பார்க்கும்போது கிணற்றில் ஒரு செருப்பு இருந்தது எனக்கு சந்தேகம் இருந்ததால் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை அழைத்தேன் . அதன்பிறகு யாரோ ஒரு நபர் உள்ளே விழுந்துவிட்டதாக தெரிந்தது . பக்கத்திலிருக்கும் யாரோ ஒரு நபர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார். 8.00 மணிக்கு தீயணைப்பு துறையினர் வந்து உள்ளே இருந்த பாடியை எடுத்தார்கள் . அது ஒரு ஆண் பிரேதம் ஆகும் . அதை தனியார் ஆம்புலன்ஸ் வைத்து ஜி .எச் -ற்கு அனுப்பிவைத்தார்கள் . மறுநாள் 28.10.2021 அன்று காலை 11.00 மணிக்கு ஜி.எச்-ல் வைத்து போலிசார் விசாரித்தார்கள்.

இறந்துபோன நபர் பெயர் ரசீத் . அவர் மிட்டபள்ளியை சேர்ந்தவர் . அதன்பிறகு நீதிமன்றத்தில் வந்து வாக்குமூலம் கொடுத்தேன் . அந்த நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்கும்போது இப்போது சொன்ன விவரத்தைதான் சொன்னேன். வாக்குமூலத்தை பதிவு செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் . தற்போத காண்பிக்கப்படும் 164 கு.வி.மு.ச வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னால் போடப்பட்டவை . அந்த வாக்குமூலம் அ.த.சா.ஆ.6 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u> இல்லை.

V DAMODARAN

Additional District Judge

Digitally signed by V DAMODARAN